DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 4/2014 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | அங்குச்சாமி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.03.2025

**முதல் விசாரணை:**

1.நான் மேக்காரைக்குடியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்ற முறையில் எனக்குத் தெரியும். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு மேக்காரைக்குடி முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவில் பொன்னாடை போர்த்துவது சம்மந்தமாக தகராறு ஏற்பட்டது. பின்பு, இருட்டு நேரத்தில் தள்ளுமுள்ளு ஆகிவிட்டது. அதில் என் வீட்டிற்கு விருந்தாளியாக வந்த எனது சின்னம்மா மகன் வேலாயுதம் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. பிறகு, இரவு நேரமாக இருந்ததாலும், கும்பலாக இருந்ததாலும் கூட்டத்தில் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. பின்னர் மறுநாள் காலையில் நான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

2. புகார் என் உடன் வந்தவர் எழுதினார். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தனரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக கோர கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை:**

எங்கள் ஊரில் உள்ள முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவிற்காக கடந்த 30.07.2013 ம் தேதி ஊருக்கு வந்திருந்தேன் என்றும். அப்போது கருங்களத்தூரைச் சேர்ந்த எனது சின்னம்மா மகன் வேலாயுதம் என்பவர் கோவில் விசேசத்திற்காக வந்திருந்தார் என்றும், அப்போது கோவில் முன்புறம் உள்ள மேடையில் கலை நிகழ்ச்சி நடந்தபோது ஊர் பெரியவர்களுக்கு மரியாதை நிமித்தமாக பொன்னாடை அணிவித்தேன் என்றும், பின்னர் 31.07.2013 அன்று நிகழ்ச்சி முடிந்து அதிகாலை 03.00 மணிக்கு நானும் ஊர் பெரியவர்களும் நிகழ்ச்சி சம்மந்தமாக கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தபோது எங்கள் ஊரைச் சேர்ந்த முத்தழகு மகன் கருப்பணன், சங்கர் மகன் ராமச்சந்திரன் ஆகிய இருவரும் கையில் கம்பிகளுடனும் நாச்சியப்பன் மகன் மனோஜ்குமார், கருப்பணன் மகன் வினோத்குமார் இருவரும் கையில் கம்புடனும் அங்கு வந்து என்னைப் பார்த்து ஏன்டா தேவிடியா பயலே எல்லோருக்கும் பொன்னாடை போர்த்தினாய் எங்களுக்கு ஏன்டா மரியாதை செய்யவில்லை என்று அசிங்கமாக பேசினார்கள் என்றும், நான் மரியாதையாக பேசுங்கள் என்று சொன்னபொழுது எனது பக்கத்திலிருந்த கருங்களத்தூரைச் சேர்ந்த எனது சின்னம்மா மகன் வேலாயுதம் என்பவர் அவர்களை பார்த்து ஏன் பெரியவர் என்று கூட பார்க்காமல் அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்டார் என்றும், அதற்கு மேற்படி 4 நபர்களும் கெட்டவார்த்தையால் வெளியூரைச் சார்ந்தவன்தானடா நீ என்று சப்போட்டாக பேசுகிறாய் என்று சொன்னதும் அவ்வாறு என் சின்னம்மா மகன் சொன்னதில் என்ன தவறு என்று நான் கேட்டேன் என்றும், அப்போது கருப்பணனும், ராமச்சந்திரனும் கையில் வைத்திருந்த கம்பியால் என்னைப் பார்த்து நீ ஊரில் இருந்தால் நாங்கள் நிம்மதியாக இருக்கமுடியாது என்றும், கையில் வைத்திருந்த கம்பியால் இத்தோடு ஒழி என்று என் தலையில் ஓங்கி அடித்தார்கள் என்றும், அப்போது எனது சின்னம்மா மகன் வேலாயுதம் தடுக்க வந்ததற்கு நீ தடுக்கிறாயா என்று கூறி இருவரும் கம்பியால் செத்து ஒழி என்று வேலாயுதத்தின் தலையின் உச்சியில் அடித்து இரத்தக் காயம்

ஏற்படுத்தினார்கள் என்றும், மனோஜ்குமார் வினோத் ஆகிய இருவரும் கையில் வைத்திருந்த கம்பால் வேலாயுதத்தின் வலது முழங்கையிலும், இடது தொடையிலும், முதுகிலும் அடித்து வீக்க காயத்தை உண்டு பண்ணினார்கள் என்றும், அப்போது அங்கு நின்றிருந்த திருநாவுக்கரசு மகன் மகேஷ், காசி மகன் ஜெயசங்கர் இருவரும் அவர்களை சத்தம் போட்டு போகச் சொன்னார்கள் என்றும், போகும்போது நான்கு நபர்களும் மிரட்டிச் சென்றார்கள் என்றும், அதன் பின்பு காயம்பட்ட வேலாயுதத்தை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாடானை அரசு மருத்துவனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றும், மேற்படி சம்பவத்திற்கு தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்திற்கு சென்று நடவடிக்கை வேண்டி புகார் கொடுத்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் எங்கள் ஊரைச்சார்ந்தவர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC.No. | : | 4/2014 |
| Deposition of Witness for | : | P.W.2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | வேலாயுதம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.03.2025

**முதல் விசாரணை:**

1.நான் கருங்களத்தூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அவர்கள் என் அண்ணன் அ.சா.1 ன் ஊரைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் எனக்குத் தெரியும். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு என் அண்ணன் ஊரான மேக்காரைக்குடிக்கு திருவிழாவிற்கு சென்றேன். அப்பொழுது நாடகம் நடந்து கொண்டிருக்கும் போது ஏற்பட்ட சண்டையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு நான் கூட்டத்தின் உள்ளே விழுந்துவிட்டேன். அப்போது நடந்த சண்டையில் எனக்கு அடிப்பட்டது. எப்படி அடிபட்டது என்று தெரியவில்லை. என்னை அங்கிருந்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது என் அண்ணன் அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக கோர கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை:**

எங்கள் அண்ணன் ஊரில் உள்ள முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவிற்காக கடந்த 30.07.2013 ம் தேதி ஊருக்கு வந்திருந்தேன் என்றும். அப்போது கோவில் முன்புறம் உள்ள மேடையில் கலை நிகழ்ச்சி நடந்தபோது ஊர் பெரியவர்களுக்கு மரியாதை நிமித்தமாக பொன்னாடை எனது அண்ணன் அணிவித்தார் என்றும், பின்னர் 31.07.2013 அன்று நிகழ்ச்சி முடிந்து அதிகாலை 03.00 மணிக்கு எனது அண்ணனும், ஊர் பெரியவர்களும் நிகழ்ச்சி சம்மந்தமாக கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தபோது எனது அண்ணன் ஊரைச் சேர்ந்த முத்தழகு மகன் கருப்பணன், சங்கர் மகன் ராமச்சந்திரன் ஆகிய இருவரும் கையில் கம்பிகளுடனும் நாச்சியப்பன் மகன் மனோஜ்குமார், கருப்பணன் மகன் வினோத்குமார் இருவரும் கையில் கம்புடனும் அங்கு வந்து எனது அண்ணனைப் பார்த்து ஏன்டா தேவிடியா பயலே எல்லோருக்கும் பொன்னாடை போர்த்தினாய் எங்களுக்கு ஏன்டா மரியாதை செய்யவில்லை என்று அசிங்கமாக பேசினார்கள் என்றும், எனது அண்ணன் மரியாதையாக பேசுங்கள் என்று சொன்னபொழுது எனது பக்கத்திலிருந்த நான் அவர்களை பார்த்து ஏன் பெரியவர் என்று கூட பார்க்காமல் அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கேட்டபோது, அதற்கு மேற்படி 4 நபர்களும் கெட்டவார்த்தையால் வெளியூரைச் சார்ந்தவன்தானடா நீ என்று சப்போட்டாக பேசுகிறாய் என்று சொன்னதும் அவ்வாறு நான் சொன்னதில் என்ன தவறு என்று என் அண்ணன் கேட்டபோது, அப்போது கருப்பணனும், ராமச்சந்திரனும் கையில் வைத்திருந்த கம்பியால் என் அண்ணனைப் பார்த்து நீ ஊரில் இருந்தால் நாங்கள் நிம்மதியாக இருக்கமுடியாது என்றும், கையில் வைத்திருந்த கம்பியால் இத்தோடு ஒழி என்று என் அண்ணன் தலையில் ஓங்கி அடித்தார்கள் என்றும், அப்போது நான் தடுக்க வந்ததற்கு நீ தடுக்கிறாயா என்று கூறி இருவரும் கம்பியால் செத்து ஒழி என்று எனது தலையின் உச்சியில் அடித்து இரத்தக் காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், மனோஜ்குமார் வினோத் ஆகிய இருவரும் கையில் வைத்திருந்த கம்பால் எனது வலது முழங்கையிலும், இடது தொடையிலும், முதுகிலும் அடித்து வீக்க காயத்தை உண்டு பண்ணினார்கள் என்றும், அப்போது அங்கு நின்றிருந்த திருநாவுக்கரசு மகன் மகேஷ், காசி மகன் ஜெயசங்கர் இருவரும் அவர்களை சத்தம் போட்டு போகச் சொன்னார்கள் என்றும், போகும்போது நான்கு நபர்களும் மிரட்டிச் சென்றார்கள் என்றும், அதன் பின்பு காயம்பட்ட என்னை 108

ஆம்புலன்ஸ் மூலம் திருவாடானை அரசு மருத்துவனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்திற்கு தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்திற்கு சென்று நடவடிக்கை வேண்டி புகார் எனது அண்ணன் கொடுத்தார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் எங்கள் அண்ணன் ஊரைச்சார்ந்தவர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.